அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் :136 / 2017
தேதி : 16.11.2017

**நியாய விலைக் கடைகளில் உளுத்தம்பருப்பு, துவரம் பருப்பு**
**தங்கு தடையின்றி விநியோகிக்க வேண்டும்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.**

தமிழக அரசு, பொது விநியோகத் திட்டத்தின் கீழ், நியாய விலைக் கடைகளில், சமீபத்தில் சர்க்கரையின் விலையை அதிகரித்ததையடுத்து, பொது மக்களின் அதிருப்தியை சந்திக்க நேரிட்டது.

இதன் தொடர்ச்சியாக, அதிர்ச்சி அளிக்கும் விதமாக கடந்த பல மாதங்களாக, உளுத்தம் பருப்பும், துவரம் பருப்பும் விநியோகிக்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது.

உளுத்தம்பருப்பு விற்கப்படாது என்ற அறிவிப்பை வெளியிட்ட உணவுத்துறை அமைச்சர், துவரம் பருப்புக்குப் பதிலாக மசூர் பருப்பு விநியோகிக்கப்படும் என்பதையும் அறிவித்துள்ளார்.

வெளிச்சந்தையை விட, குறைந்த விலையில் உளுத்தம்பருப்பு, துவரம்பருப்பு போன்ற பருப்பு வகைகள், ரேஷன் கடைகளில் கிடைத்துவந்தது ஏழை, எளிய நடுத்தர மக்களுக்கு உதவிகரமாக இருந்து வந்துள்ளது. தற்சமயம் இவை ரேஷன் கடைகளில் விநியோகிக்கப்படாதது, இவர்களை மிகுந்த சிரமத்திற்கு ஆளாக்கும். இந்நிலையில், உணவுத்துறையும், கூட்டுறவுத்துறையும் தங்களுக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டிப் பேசிவருவதும் ஏற்புடையதல்ல.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

எனவே, ரேஷன் கடைகளில் உளுத்தம் பருப்பும், துவரம் பருப்பும் தங்கு தடையின்றி விநியோகிக்கப்படுவதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும். மேலும் ஊட்டச்சத்து குறைபாடுகளை நீக்குவதாகவும், விவசாயத் தொழிலை ஊக்கப்படுத்தும் விதமாகவும், சிறுதானிய வகைகளையும், குறைந்த விலையில் விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com